Registered as a News Paper  பக்கங்கள் 4  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  கார்த்திகை 29  (14-12-1992)  திங்கட்கிழமை  ஓசை 300

## தபால் விநியோகத்தை சீர்குலைக்க கூட்டுப்படை முயற்சி

யாழ் குடாநாட்டிற்கான தபால் சேவையை மட்டுப்படுத்த கூட்டுப்படைத் தலைமையகம் முயற்சி செய்து வருவதாக தெரியவருகிறது. கடந்த மாதம் யாழ் குடா நாட்டிற்கான சுமார் 700 தபால் பொதிகள் கொழும்பு பிரதம தபாலகத்திற்கு வந்தபோதும் அவற்றில் 67 பொதிகள் மட்டுமே கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டன. இவற்றில் 2 பொதிகளிலுள்ள தபால்கள் உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. மிகுதிப்பொதிகள் முற்றாக சோதனையிடப்பட்ட பின்னரே அனுப்பி வைக்கப்படும் என கூட்டுப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை தற்போது பருத்தித்துறையில் பொருள் (4ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டம் தமிழ்க் குழுக்கள் குத்து வெட்டு

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கிடையில் பெரும் இழுபறி நிலையும், குத்து வெட்டும் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த இழுபறி நிலைக்கு தமிழ்க் குழுக்கள் கூட்டாக வைத்த நான்கு அம்ச தீர்வுத்திட்டத்தை விடுத்து தனித்தனியாக சில குழுக்கள் தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளமையே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமையன்று கொழும்பில் கூடிய இக்குழுக்களின் கூட்டத்தின் போதே இந்த முரண்பாடுகள் பெரியளவில் வெடித்தன. ரெலோ இயக்கம் புதிதாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியான மாகாணங்களைக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்த போதே இக் குத்து வெட்டு நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது. ரெலோவின் இந்த யோசனையை புளொட் குழு ஆதரித்ததாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை ரெலோ, புளொட் குழுக்கள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் இவற்றை எதிர்த்ததாகவும் நான்கம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியதாகவும் தெரியவருகின்றது.

இவற்றின் அடிப்படையில் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களிடையே பலத்த கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் இந்த வருடத்தில் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதும், இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் பாதுகாப்பு குறித்த எந்த உத்தரவாதத்தையும் தர அவை தவறிவிட்டன என்று முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## தெரிவுக்குழுவின் தோல்வி; புலிகளின் கை ஓங்கும்

– பிரேமச்சந்திரன்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைப் பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவு குழு எந்தத்தீர்மானத்துக்கும்வரமுடியாமல்தோல்வியில் முடிவடைந்தது விடுதலைப் புலிகளின் செல்வாக்கை மேலும் அதிகரிக்கச் செய்யும் என ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான தீர்வை அரசு வரவிடாமல்செய்ததோடு, வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைக்கவேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையைச் சிங்கள அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் நிராகரிப்பதன் மூலம் தனிநாடு கோரும் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரிக்கும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## மீட்புநிதி சேகரிப்பு 18-ம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை மீட்புநிதி கடன் திட்டத்தில் பங்கேற்காத வசதியுள்ளவர்கள் தமிழீழ மீட்பு நிதிக்கு தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு வாய்ப்பாக இம் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நேரடியாகச்சென்று மீட்புநிதி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

மீட்புநிதியாக ரூபா 10,000 பட்டும் பணமாக பெறப்படும் எனவும் பவுண் நகைகளோ, காசோலைகளோ பெற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் மீட்புநிதி செலுத்துவோரை கவனத்திற் கொள்ளுமாறு தமிழீழ மீட்புநிதி பொறுப்பாளர் வெற்றி அரசன் தெரிவித்துள்ளார்.

மீட்புநிதி செலுத்துவதற்கான நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

### மத மாற்ற நடவடிக்கை

## கன்ரபரி பிஷப்புடன் மகாசங்கம் பேச்சு

(கொழும்பு)

வறுமை நிலையில் வாழும் பௌத்தர்களுக்கு உதவுவதன் மூலம் மதமாற்றத்தில் ஈடுபடத்தூண்டுவது பற்றியும், பௌத்த-சிங்கள பெரும்பான்மையினரால் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதாக கூறப்படுவது பற்றியும் கன்ரபரி பிஷப் ஜோர்ஜ் லியோனார்ட் கரேயுடன் பேச்சு நடத்தியிருப்பதாக பலிப்பான சிறிகுணரட்ண சந்தானந்த மகாநாயக்க தேரோ கூறியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று கண்டியிலிருக்கும் அஸ்கிரிய பீடத்தின் சர்வதேச நிலையத்தில் கன்ரபரி பிஷப் ஜோர்ஜ் லியோனார்ட் கரேயுடன்இடம் பெற்ற சந்திப்பின் போது மகாநாயக்க தேரோ சுட்டிக் காட்டியதாக தெரியவருகிறது.

மகாநாயக்க தேரோ மேலும் கூறுகையில்; சமூகசேவை என்ற போர்வையுடன் இங்கு செயற் (4ஆம் பக்கம் பார்க்க)

### சிகிரியா அநுராதபுரம்

## விமானப்படை தளங்களில் வெடி விபத்துக்கள்

(கொழும்பு)

சிகிரியா விமானப்படை விமானத்தளத்தில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத குண்டுகள் சிலவற்றைச் செயலிழக்கச் செய்யும் முயற்சியில்

கூறியுள்ளன.

இதே போன்றதான இன்னுமொரு வெடி விபத்து நவம்பர் 25-ம் திகதியன்று அநுராதபுரம் விமானத்தளத்திலும் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

மேலும் பாவனைக்குதவாத காலங்கடந்த வெடிமருந்துகளும், குண்டுகளும் பெருமளவில் தேங்கிப் போயிருப்பதாக

## வட-கிழக்கு இணைப்புக்கெதிராய் 'ரெலோ' பிரசாரம் செய்யும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தனித்தனி மாகாண சபைகளைக் கொண்டதாகவும் இவ்விரு மாகாணங்களுக்கும் ஒரேயொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆளுநரைக் கொண்டதுமான புதிய யோசனை ஒன்றை

உள்ளது. ரெலோவின் இந்த புதிய யோசனைக்கு புளொட் குழுவும் ஆதரவு தெரிவித்துள்ளது

மேலும் ரெலோவின் யோசனையின் படி அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு

கப்படும் 1983க்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மீளப் பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இத்தீர்வுத் திட்டத்தை தான் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன்

## உணவுப் பொருள் இறக்குதல் ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று மீண்டும் இரண்டு கப்பல்களில் இருந்தும் உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்றுள்ளன.

'மெரினால்' கப்பலுக்கு இரண்டு 'பாஜ்'களும் 'குமாரி' கப்பலுக்கு ஒரு பாஜ்ஜும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மெரினால் கப்பலில் உள்ள உணவுப் பொருள்கள் இன்று மாலையுடன் இறக்கி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் இரு

'பாஜ்'கள் இல்லாத நிலையிலும் இரண்டு கப்பல்களில் இருந்தும் உணவுப் பொருள் இறக்கும் வேலைகள் ஓரளவு துரிதமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (யோ)

## தபால் பொதி இல்லை

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பலில் யாழ் மாவட்டத்திற்கான தபால் பொதிகள் எடுத்துவரப்படவில்லை.

வது பற்றியும் கன்ரபரி பிஷப் ஜோர்ஜ் லியோனார்ட் கரேயுடன் பேச்சு நடத்தியிருப்பதாக பலிப்பான சிறிகுணரட்ண சந்தானந்த மகாநாய

காட்டியதாக தெரியவருகிறது மகாநாயக்க தேரோ மேலும் கூறுகையில்; சமூகசேவை என்ற போர்வையுடன் இங்கு செயற்

(4ஆம் பக்கம் பார்க்க)

தனித்தனியான மாகாணங்களைக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்த போதே இக்குத்து வெட்டு நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது ரெலோவின் இந்த யோசனையை புளொட் குழு

தாகவும் தெரியவருகின்றது.

இவற்றின் அடிப்படையில் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களிலேயே பலத்த கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

மக்களின் பாதுகாப்பு குறித்து எந்த உத்தரவாதத்தையும் தர அவை தவறிவிட்டன என்று முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

சிகிரியா அநுராதபுரம்

# விமானப்படை தளங்களில் வெடி விபத்துக்கள்

(கொழும்பு)

சிகிரியா விமானப்படை விமானத்தளத்தில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத குண்டுகள் சிலவற்றைச் செயலிழக்கச் செய்யும் முயற்சியில் வெடி குண்டு நிபுணர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்த விபத்து நேரிட்டதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதே போன்றதான இன்னுமொரு வெடி விபத்து நவம்பர் 25-ம் திகதியன்று அநுராதபுரம் விமானத்தளத்திலும் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

மேலும் பாவனைக்குதவாத காலங்கடந்த வெடிமருந்துகளும், குண்டுகளும் பெருமளவில தேங்கிப் போயிருப்பதாகவும் அவற்றை அழிக்கும் முயற்சியில் அதிகாரிகள் இரவு பகல் பாராது தொடர்ந்து ஈடுபட்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு இணைப்புக்கெதிராய் 'ரெலோ' பிரசாரம் செய்யும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தனித்தனி மாகாண சபைகளைக் கொண்டதாகவும் இவ்விரு மாகாணங்களுக்கும் ஒரேயொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆளுநரைக் கொண்டதுமான புதிய யோசனை ஒன்றை ரெலோ குழு முன்வைக்க உள்ளது. ரெலோவின் இந்த புதிய யோசனைக்கு புளொட் குழுவும் ஆதரவு தெரிவித்துள்ளது

மேலும் ரெலோவின் யோசனையின் படி அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஊவா மாகாணத்துடன் சேர்க்கப்படும் 1983க்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மீளப் பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இத்தீர்வுத் திட்டத்தை தான் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன் வைக்கப் போவதாகவும் ரெலோ குழு தெரிவித்துள்ளது. அத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அக்குழு தெரிவித்தது.

கடந்த சனியன்று இது தொடர்பாக கொழும்பில் ஏனைய தமிழ் குழுக்களுடன் ஆலோசனை செய்யப்பட்டதாகவும் புளொட் குழு மட்டுமே இதற்கு ஆதரவு தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

## பாராளுமன்ற தெரிவுக்குழு; எதிர்காலம் குறித்து கேள்வி

(லண்டன்)

"இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழு கலைக்கப்பட்டு விடுமா அல்லது அதன் கால எல்லை நீடிக்கப்படுமா என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை' என பி.பி.ஸி. அறிவித்தது

இத்தெரிவுக்குழுவின் இறுதி அமர்வு முடிவு எதுவுமின்றி கலைந்தது தெரிந்ததே. இதையடுத்தே இவ் ஐயப்பாடு எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

'ஜனாதிபதி தேர்தல் நடக்கும் வரை தெரிவுக்குழுவின் காலமும் நீடிக்கப்படலாம் என சிலர் கருதுகின்றனர். ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடத்தப்படலாம் எனவும் அவர்கள் கருதுகின்றனர்"

இவ்வாறு பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

# உணவுப் பொருள் இறக்குதல் ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று மீண்டும் இரண்டு கப்பல்களில் இருந்தும் உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்றுள்ளன.

'மெரினால்' கப்பலுக்கு இரண்டு 'பாஜ்'களும் 'குமாரி' கப்பலுக்கு ஒரு பாஜ்ஜும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மெரினால் கப்பலில் உள்ள உணவுப் பொருள்கள் இன்று மாலையுடன் இறக்கி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டதும் காங்கேசன்துறைக்குச்சென்று யாழ் மாவட்டத்திற்கான உரவகைகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்.

காலநிலை சீரற்ற போதிலும் நல்ல நிலையில் போதிய 'பாஜ்'கள் இல்லாத நிலையிலும் இரண்டு கப்பல்களில் இருந்தும் உணவுப் பொருள் இறக்கும் வேலைகள் ஓரளவு துரிதமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (யோ)

## தபால் பொதி இல்லை

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும 'குமாரி' கப்பலில் யாழ் மாவட்டத்திற்கான தபால் பொதிகள் எடுத்துவரப்படவில்லை.

இது சம்பந்தமாக யாழ். தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் கப்பலுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தபால் பொதிகள் எடுத்துவரப்படவில்லையென கப்பலில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (யோ)

# மட்டக்களப்பில் படை நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா படைகள் ஜெயகங்கா என்ற இராணுவ நடவடிக்கைகளை புதிதாக மேற்கொண்டுள்ளன.

ஜெய கங்கா தாக்குதல் நடவடிக்கையின் போது ஒதியங்காட்டாறு இலுப்பட்டிச்சேரி, பள்ளியிருப்பு, கலையமடு ஆகிய இடங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜெய கங்கா நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுவதாக இராணுவ வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

# பொலிஸில் 5000 பேரை சேர்த்துக் கொள்ள முடிவு

(கொழும்பு)

அடுத்தவருட முற்பகுதியில் பொலிஸ் படைக்கு புதிதாக ஐயாயிரம் பேரை சேர்த்துக் கொள்ள இருப்பதாக சிறிலங்கா பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் படைக்கு புதிதாக ஆட்களை திரட்டுவதற்கு கொழும்பிலும் வெளியூர்களிலும் நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் தெரிவுசெய்யப்படுபவர்கள் அனைவரும் நிரந்தர பொலிஸ்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் புதிதாக தெரிவுசெய்யப் படுபவர்களுக்கு ஆறுமாத கால பயிற்சி அளிக்கப்படஉள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# நிவாரண உதவி எதுவுமின்றி கிழக்கில் தமிழர்கள் அவதி

## வாகரையில் 4000 பேர் பட்டினியால் தவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் உணவின்றி பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் சுமார் 4,000 குடும்பங்கள் கடந்த பல மாதங்களாக உலர் உணவு நிவாரணம் எதுவும் இன்றி பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன

இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உண்ண உணவு இல்லை, உடுக்கமாற்று உடையில்லை, இலை குழைகளையும், காய் பிஞ்சுகளையுமே இம்மக்கள் உண்டு தமது உயிரைப் பிடித்து வைத்துள்ளனர்.

அதேவேளை செங்கலடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கும் கடந்த நான்கு மாதங்களாக உலர் உணவு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

இம்மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் வேண்டுமென்றே கூட்டுறவுச் சங்கங்களை அதிகாரிகளால் தடுக்கப்பட்டிருப்பதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் கூறுகின்றன

இவ்வாறு உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமல் இம்மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறையிடப்பட்டிருக்கிறது

# குடியிருப்புகள் மீது எறிகணை வீச்சு

(பொன்னாலை)

மூளாய், பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கள் மீது காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரால் அகோர எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை முதல் இரவு 8-30 மணிவரை மேற்படி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டனர். பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் காணப்படும் குடியிருப்புப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இப்பகுதி மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான பகுதிகளை நோக்கி ஓடினர்

எனினும் இத்தாக்குதலால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லையென்று தெரிய வருகிறது.

கட்டுவன், வசாவிளான் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விளான், ஏழாலை ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல், கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணிதொடக்கம் நள்ளிரவுவரை இத் தாக்குதல் நிகழ்ந்தவண்ணமிருந்தன எனினும ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தெரியவில்லை. (பா)

# ஊனமுற்ற நிலையில் 15,000 ஆயுதப்படையினர்

(கொழும்பு)

ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களில் சுமார் 15,000 பேர் ஊனமுற்ற நிலையில் இருப்பதாகவும், இவர்களது புனர்வாழ்வுப் பணிக்கென வீடமைப்பதற்கு குறைந்தபட்சம் இருபது ஏக்கர் நிலம் அவசியம் எனவும் இளைப்பாறிய படையினர் சங்கத்தின் வீடமைப்புக்குழுத் தலைவரான மேஜர் ஏ. எம். எம். நசீக் கூறியுள்ளார்.

இந்த வீடமைப்புக்கான நிதியை திரட்டுவதற்கு அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் விற்கப்பட இருப்பதாகவும், தனியார் மற்றும் அரச நிறுவனங்களிடமிருந்தும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவியைப்பெற இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு விசாரணைக் குழு அமைக்குமுன் ஆலோசனை செய்க

## - ஏழு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் கொலை தொடர்பாக சர்வதேச விசாரணை கமிசன் ஒன்றை நியமிக்குமாறு திருமதி கொப்பேகடுவ கேட்ட போதிலும் அக்கமிஷன் அமைக்கு முன்னர் அதன் செயல் திட்டங்கள் தொடர்பாக எதிர்க் கட்சிகளுடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும் என சுதந்திரக் கட்சி உட்பட ஏழு எதிர்க கட்சிகள் கூட்டாக பத்திரிகை மூலம் அரசுக்கு வேண்டுகோள்விடுத்தன

(4ஆம் பக்கம் பார்க்க)

# மகாறம்பைக் குளத்தில் புதிய சிங்களக் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் தமிழ் மக்களின் காணிகளில் கட்டப் பட்டுவரும் ஐந்நூறுவீடுகளில் சிங்களக் குடும்பங்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இந்தக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் தமிழ்க் குடும்பங்கள் பல அகதிகளாகியுள்ளன.

சிங்கள அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் இராணுவத்தின் மேற்பார்வையில் கட்டப்படும் இப் புதிய வீட்டுத்திட்டம் பற்றி கருத்துத் தெரிவிக்க தமிழ் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் சிங்கள மக்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதில் அரசாங்கம் தீவிர அக்கறை செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது. (தி)

## வரி விளம்பரம்

### அராலியூரரின் நூல்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்கள் எந்த வானொலிநிலைய திற்கும் நாடகங்கள் எழுதலாம். 1 பொலிடோலேகதி 2.பணமோபணம்.மேடை நாடகங்கள். 3. கெட்டிக்காரர்கள் 4 முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள். (3751)

### வாடிக்கையாளருக்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி (சி-5510)

## நிவாரணம் வழங்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் வசிக்கும் 73 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு போக்குவரத்து சீராகும் வரை தொடர்ந்து இலவச நிவாரணம் வழங்கும்படியும், இதற்கான நிவாரணப் பொருள் ஒதுக்கீடு புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்கப்படும் எனவும் செயலக புனர்வாழ்வுப் பகுதி வேலணை பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளது. (22)

## நள்ளிரவுவரை வீதி விளக்குகள்

யாழ். மாநகர சபையின

## வவுனியாவில் கைதாவோர் உடன் மகசீன் சிறைக்கு

(வவுனியா)

வவுனியா இராணுவ சோதனை முகாம் பகுதியில் தடை செய்யப்பட்ட பொருள் எடுத்து வந்து கைது செய்யப்படுவோர் அனைவரும் உடனுக்குடன் மகசீன் சிறைச் சாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

சிறிய பொருள்களை குறைந்தளவில் எடுத்து வந்து கைதானவர்கள் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது

வடபகுதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வவுனியா நீதிமன்றில் வைத்தே விடுதலை செய்யப்படுகின்றனராம். (தி)

## சீனி விலையில் வேறுபாடு பாவனையாளர்கள் விசனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்குஒருகிலோ சீனியை 35 ரூபாவுக்கும், புலோலிபலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் பாவனையாளருக்கு பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ சீனியை 28 ரூபாவுக்கும் விநியோகித்து வருகின்றன. அருகருகே இருக்கும் இவ்விரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் சீனி விலையில் கிலோவுக்கு 7 ரூபா வித்தியாசப்பட்டிருப்பது பற்றி பருத்தித்துறைப் பகுதிபாவனையாளர்கள் பலத்த விசனம் தெரிவித்துள்ளனர். (25)

## குழாய்க் கிணறு அமைக்க சர்வோதயம் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வசந்தபுரம், கோப்பாய், கைதடி ஆகிய கிராமங்களில் சர்வோதயம் அமைப்பினர் விரைவில் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக இவ் அமைப்பின் அதிகாரி ஒருவர் கூறுகையில்; பாவனையாளர்களுக்கு நன்னீர் வழங்கும் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

## அகதிமுகாமில் குழாய்க்கிணறு அமைப்பதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் குழாய்க் கிணறுகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் கூடுதலாக உள்ள முகாம்களில் நாற்பது கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு குழாய்க் ... என மதிப்பிடப் பட்டுள்ளது.

இத் தொகையை வழங்கி உதவுமாறு வட பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பி. ரட்ணசபாபதி வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். முகாம்களில் வயிற்றோட்ட நோய் காணப்படுவதால் தண்ணீர் ...

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

சுன்னாகம் கிராம சேவை பண்ணையில் வைத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் சில வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளது.

கடந்த 24 11 92 அன்று பிற்பகல் 2 00 மணியளவில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் தாவடி சிற்றூர் பொறுப்பாளர் திரு. கலியுகன் அவர்கள் கலந்து கொண்டு கோழிக்குஞ்சுகளை வைபவரீதியாக வழங்கினார்.

## வடபகுதிக்கு நகை அணிந்துவரத் தடை

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவசோதனை முகாமில் வைத்து தங் நகை அணிந்து வருவோர் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கொழும்பு மற்றும் தென்பகுதிகளிலிருந்து குறிப்பிட்ட பவுணுக்கு அதிமோக நகைஅணிந்து வருவோரே திருப்பி அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

நாளாந்தம் சுமார் நூறு தமிழ்ப் பெண்கள் தாண்டிக்குளம் சோதனை முகாமிலிருந்து மீளத் தமது இருப்பிடத்தை நோக்கித் திரும்பிச்செல்கின்றனர்,

சமீப நாட்களாக ஒன்றரை பவுணுக்கு அதிகமாகவட பகுதி நோக்கி எவரும் பவுண் கொண்டு செல்ல முடியாது என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வரும் தமிழ்ப் பெண்கள் தமது தாலிக்கொடியை கழற்றி வைத்துவிட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (தி)

## சொற்பொழிவுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்திய சொற்பொழிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு:

**ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்: ஸ்ரீ துஷியந்தி. இரண்டாம் இடம்: க ஒப்பில நம்பி.

**பாலர் பிரிவு**

முதலாம் இடம்; ஜெ சிந்துஜா இரண்டாம் இடம்: இ. லீணாயாழினி மூன்றாம் இடம்; க. அருள்நம்பி.

**கீழ்ப் பிரிவு**

முதலாம் இடம்; த. சௌசல்யா இரண்டாம இடம்; செ. துஷ்யந்தினி மூன்றாம் இடம்; இ. கிரிசாந்தினி.

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்; க. சுமதி இரண்டாம் இடம்;ப.கோகிலராணி மூன்றாம் இடம்;சி.சிவரூ?

**மேற் பிரிவு**

முதலாம இடம்; வி வினோதினி இரண்டாம் இடம்; கு.துஷியந்தி மூன்றாம் இடம்; இ சுகந்தினி

**அதிமேற் பிரிவு**

முதலாம இடம்; ந ஜெபகாந்தன். இரண்டாம் இடம்: சி யசோதரன் மூன்றாம் இடம்; கு. சித்திரா (24)


### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு பரிசு பெறுவோர் விபரம்

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் (அங்கிலப் பாடசாலை) இன்றறக்ட்கழகத்தினரால் விழிப்புலனற்றோர் நலன்களை விருத்தி செய்வது தொடர்பாக 5-12-92 இல் இடம்பெற்ற அதிர்ஷ்ட லாபச் சீட்டு இலக்கங்கள் :

1 ஆம் பரிசு: 1847 2ஆம் பரிசு: 56
3 ஆம் பரிசு : 1361

(சி-5585) இன்றறக்ட் கழகப் பொறுப்பாசிரியர்

### அனித்தா பயிற்சி நிலையம்

❋ SUGAR CRAFT ❋ FACIAL
❋ BRIDAL MAKEUP ❋ NEEDLE WORK
❋ COOKERY ❋ CAKE ICING
❋ HAIRSTYLE ❋ FLOWER MAKING

வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.


## அறிவியல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு சனசமூக நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை (18 12. 92) மாலை ஐந்து முப்பது மணியளவில் இலங்கை அரசியலில் பௌத்தத்தின் பங்கு என்னும் தலையங்கத்தின் கீழ் திருமு திருநாவுக்கரசு உரை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் அன்றைய தினத்தில் இந்நிலையத்தின் உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த லெப். சீலன் (சார்ள்ஸ் அன்ரனி) நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான வீரவேங்கை சுரேன் (திருச்சிற்றம்பலம் சுரேந்திரன்) கப்டன் ஆஷா (பத்மாவதி நடராசா) ஆகியோரின் உருவப்படங்களும் திறந்து வைக்கப்படவுள்ளது

## 6 மாதங்களாக சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் கீழ் கடமையாற்றிய ஊழியர்கள் சிலருக்கு ஆறு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ் வேதனம் கிடைக்கப் பெறாத ஊழியர்கள் பல தடவைகள் சமாசத்தினருடன் தொடர்பு கொண்டும் ஒரு வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர். [24]

## ஆரையம்பதி சுற்றிவளைப்பு பல தமிழிளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆரையம்பதி, மண்டலத்தடி, கன்னன்குடா ஆகிய கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திபல அப்பாவிப்பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5 30மணியளவில் மேற்படி கிராமத்துக்கு நூற்றுக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினர் வந்தனர் இவர்கள் இம்மூன்று கிராமங்களையும் சுற்றிவளைத்துதீவிர தேடுதல் வேட்டையை நடாத்தினர். இங்குள்ள பொது மக்கள் அனைவரையும் பொது இடங்களுக்குஅழைத்துச் சென்றுவிசாரணைநடாத்தினர் அதன் பின்னர் அங்கிருந்த பல பொதுமக்களை படையினர் கைது செய்து தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர்

## உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம் அமுலாகிறது

முல்லை மணலாறு மாவட்டத்தில் வறிய விவசாயிகள் சுயமாக உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு நெற்செய்கைத் திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடைமுறையில் வழங்கப்பட்டு வருகிறது.

## மூடிவிடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்தை மூடி...

## அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் வசிக்கும் 73 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு போக்குவரத்து சீராகும் வரை தொடர்ந்து இலவச நிவாரணம் வழங்கும்படியும், இதற்கான நிவாரணப் பொருள் ஒதுக்கீடு புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்கப்படும் எனவும் செயலக புனர்வாழ்வுப் பகுதி வேலணை பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளது. (22)

## நள்ளிரவுவரை வீதி விளக்குகள்

யாழ். மாநகர சபையினரால் யாழ். மாநகர எல்லைகளில் எரிய விடப்படும் விளக்குகள் அடுத்தவருட ஆரம்பப் பகுதியில் இருந்து நள்ளிரவு 12 மணிவரை எரியவிடப்படும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் அடுத்தவருட ஆரம்ப காலத்தில் வீதி வெளிச்ச விளக்குகளின் எண்ணிக்கையை தாம் அதிகரிக்க நினைத்துள்ளதாகவும் இதற்காக புனர்நிர்மான அமைச்சிடம் நிதிகோரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் சில இளைஞர் மன்றங்கள், சில சனசமூக நிலையங்களும் இவ் வீதி வெளிச்ச விளக்குகளை தாமாகவே தயாரித்து வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். இத்தகைய முன்மாதிரியான செயலைச் செய்வதற்கு மற்றைய மன்றங்களும் வேறு சில அமைப்புக்களும் முன்வர வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (07)

## நாவலர் குருபூசை

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை பிற்பகல் மூன்று மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை இடம்பெறவுள்ளது. கலாநிதி சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி சிறப்புரையாற்றவுள்ளார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் மக்கள் முன்னேற்றச்சங்கச் சனசமூக நிலையத்தின் 41 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி நண்பகல் 11.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமங்களில் சர்வோதயம் அமைப்பினர் விரைவில் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக இவ் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

## அகதிமுகாமில் குழாய்க்கிணறு அமைப்பதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் குழாய்க் கிணறுகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் கூடுதலாக உள்ள முகாம்களில் நாற்பது கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு குழாய்க் கிணறு அமைக்க 15,000 ரூபா என்ற வகையில் மொத்தம் 6,00,000 ரூபா செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இத் தொகையை வழங்கி உதவுமாறு வட பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பி. ரட்ணசபாபதி வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். முகாம்களில் வயிற்றோட்ட நோய் காணப்படுவதால் தண்ணீர் வசதி வழங்குவது அவசியம் எனவும் கடித மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

## வட்டுக்கோட்டை வயல்களில் எரிவந்தம் நோய்

யாழ்.மாவட்டத்தில் வட்டுக்கோட்டை வயல்களில் சில இடங்களில் எரிவந்தம் நோய் காணப்படுகிறது. இது ஒரு விளைவை முற்றாகப் பாதிக்கக்கூடிய பங்கஸ் நோயாகும்.

ஆரம்பத்தில் இலைகளில் புள்ளிகள் (கண்போன்ற) நீலம் கலந்த பச்சை சாம்பல் நிறமானது காணப்படும். ஈரலிப்பு, மப்பு மந்தாரம் கூடிய நைதரசன் பசளைப் பிரயோகம். நிழல். நெருக்கமான பயிர் ஆகியவை காணப்படுமிடத்து இப் புள்ளிகள் இலை முழுவதும் பரவி, இலைகளுங்கள் இறந்து காணப்படும். இத்தாக்கத்தின் போது இலைகள் எரிந்தது போன்று காணப்படும். இது தண்டையும், கதிரையும், பூக்களையும் கூட தாக்கும். இதனால் கதிர் வெண்கதிராகவும், மணி சப்பியாகவும் வரக்கூடும்.

அநேகமான புதிய நெல் இனங்கள் இந்நோயை தங்கக் கூடியவை. இலையில் புள்ளி வந்தாலும் அதிகம் பாதிக்கப்பட மாட்டாது.

ஆயினும் தாக்கம் இருப்பின் கசமின் என்ற கிருமிநாசினி 1 அவுன்ஸ் 6 கலன் நீரில் கலந்து விசிறி கட்டுப்படுத்தலாம் (கிலோசேரன் என்ற நாசினியும் விசிறலாம்).

தாங்கக் கூடிய இனங்களை பயிரிடுவதன் மூலமும், விதை தொற்று நீக்குவதன் மூலமும், அளவான பசளை பாவிப்பதன் மூலமும், துப்புரவான செய்கை மூலமும் இந்நோயை வராமல் குறைக்க முடியும்.

மேலும் விபரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## ஆண்டு ஒன்று விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் ஆண்டு 1ற்கு அனுமதி பெற விரும்புவோர் இம்மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை அதிபரிடம் ஒப்படைக்குமாறு அதிபர் தெரிவித்துள்ளார். [24]

## அபிஷேகமும் இலட்சார்ச்சனையும்

பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதைபடிப்பும் அபிஷேகமும், இலட்சார்ச்சனையும் கடந்த வியாழன் முதல் இடம்பெற்று வருகின்றது. ஆலய பிரதம குருவான ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்வைபவங்களில் தினமும் காலை பத்து மணிக்கு விசேட பூசையும், தொடர்ந்து ஸ்நபனாபிஷேகமும், மகாகணபதி ஹோமமும், அர்ச்சனையும் நடைபெற்று வருகிறது.

லாபச் சீட்டு இலக்கங்கள் :

1 ஆம் பரிசு: 1887 2ஆம் பரிசு: 56

3 ஆம் பரிசு : 1361

(சி-5585) இன்ரறக்ட் கழகப் பொறுப்பாசிரியர்


## அனித்தா பயிற்சி நிலையம்

- SUGAR CRAFT
- BRIDAL MAKEUP
- COOKERY
- HAIRSTYLE
- FACIAL
- NEEDLE WORK
- CAKE ICING
- FLOWER MAKING

வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கே. கே. எஸ். வீதி,
பூனாறி மரத்தடி, கொக்குவில்.

(சி-5586)


## 4-ம் வருட நினைவஞ்சலி

மலர்வு:
18-09-1958

❋ ❋ ❋

உதிர்வு:-
14-12-1988



### கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன்
(கணபதிப்பிள்ளை & சன்ஸ், பளை)

பூத்த மலர் நீ!
மணப்பதற்குள் உதிர்ந்து விட்டாய்
நான்காண்டு சென்றாலும் உன்வாசம் மாறவில்லை
எம் இதயம் நிறைந்த சீர்நிறை மன்னவனே
உன்பிரிவால் வாடுகிறோம்,
உனை எங்கும் தேடுகிறோம்,
சாந்தி நீ பெற்றிடுவாய்!
சாந்தி நீ தந்திடுவாய்!

"இரஞ்சித பவனம்",
கண்டிவீதி,
கொடிகாமம்.

தாய், தந்தை,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், உறவினர்,
நண்பர்கள்.

3712)

டலத்தடி. கன்னன்குடா ஆகிய கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திபல அப்பாவிப்பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5 30மணியளவில் மேற்படி கிராமத்துக்கு நூற்களையும் சுற்றிவளைத்துதீ பிரதேடுதல் வேட்டையை நடாத்தினர். இங்குள்ள பொது மக்கள் அனைவரையும் பொது இடங்களுக்கு அழைத்துச் சென்றுவிசாரணைநடாத்தினர் அதன் பின்னர் அங்கிருந்த பல பொதுமக்களை படையினர் கைது செய்து தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர்

## உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம் அமுலாகிறது

முல்லை மணலாறு மாவட்டத்தில் வறிய விவசாயிகள் சுயமாக உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு நெற்செய்கைத் திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நூறு வறிய விவசாயிகளுக்கு தலா ஒவ்வொரு ஏக்கர் நெற்செய்கைக் காணியில், செய்கைபண்ண தேவையானவிதைநெல், உரம், கிருமிநாசினிகளை கொல்லி போன்றனவும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

## மூடிவிடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்தை மூடிவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு 1971-ம் ஆண்டின் 38-ம் இலக்க சட்டத்தின் கீழ் மூலதனம் பெறப்பட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தமை தெரிந்ததே.

## நினைவு கூருகின்றோம்...

**1992-12-14**

1988-ம் ஆண்டு இதே தினத்தில் மயிலிட்டிப்பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989-ம் ஆண்டு நிந்தாவூர்ப் பகுதியில் தேச விரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

யூசுப் (பிரான்சிஸ் குரோசப்)

1990-ம் ஆண்டு பலாலிப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து, மருத்துவமனையில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

நிதி (சசிகலா இரத்தினசிங்கம் - அம்பாள்புரம். கனகபுரம்-கிளிநொச்சி)

கிளிநொச்சிப்பகுதியில், சிறிலங்காப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

விஜி (சுப்பிரமணியம் விஸ்வநாத் திருவையாறு-கிளிநொச்சி

திருக்கோணமலை-தோப்பூர்பகுதியிலுள்ள முஸ்லிம் ஊர்காவற்படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட உப்பூறல் பகுதியைச்சேர்ந்த 2-தமிழ்ப்பொது மக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5579]

**சிந்தனைக்கு**

கொடுங்கோலரின் இரத்தத்தை நீராகப் பாய்ச்சினால் தான், சுதந்திரம் என்னும் தரு தழைத்தோங்கும்.

— பெர்ட்ராண்ட் வியென்ஸாக்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 14-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2(2?)
த. பெ. எண் - 05

## "போருடன் பேசுதல்" ஓர் இராஜதந்திரப் பொறி

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய ஓர் அரசியல் தீர்வை முன்வைப்பதற்குத் தயாராக இல்லை. இராணுவ வெற்றி ஒன்றின் மூலம் தமிழர் மீதொரு தீர்வைத் திணிப்பதையே நோக்கமாகக்கொண்டே செயற்பட்டுவருகின்றது. இந்நிலையில்தான், யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை ஒன்று நடத்துவதற்குப்பதில், யுத்தம் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் போதே மறுபுறத்தில் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அரசு முனைகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த சர்வதேச சமாதான நல்லெண்ணத்தூதுக் குழுவினரான 'குவேர்க்கஸ்' ஊடாக "போருடன் பேசுதல்" என்ற யோசனையை சிறிலங்கா அரசாங்கம் புலிகளிடம் முன்வைத்திருந்தது. இது தமிழரின் நலனைப் பாதிக்கும் ஒன்று என்பதோடு, பொதுவாக உலக நடைமுறைக்கு விரோதமான தொன்றும் ஆகும்.

உலக வழக்கத்தில் போரில் ஈடுபடும் இரு அணியினரும், முதலில் யுத்த நிறுத்தம் பற்றியே பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர். யுத்த நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தை வெற்றியளிப்பின் அது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, அப்புறமே சமாதான நடவடிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது ஐரோப்பாவில் நடந்துவரும் செர்பியாவிற்கும் பொஸ்னியாவிற்கும் இடையிலான போரின் போதும் யுத்தநிறுத்தம் பற்றியே முதலில் பேசப்படுகின்றது. யுத்தநிறுத்தம் குறித்து 35 தடவைகளுக்கு மேல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபோதும், அவை தோல்வியில் முடிவடைந்தன. இருப்பினும் போரை நிறுத்துவதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் முதலில் யுத்தநிறுத்தம் பற்றிப் பேசப்படுகின்றதே ஒழிய முதலில் தீர்வு குறித்து பேசப்படவில்லை. ஏனெனில் அது நடைமுறைச் சாத்தியமற்றது ஆகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம்வழமைக்கு மாறாகபேச முற்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழரை மீண்டும் ஒருமுறை ஏமாற்ற சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து 'எவ்வளவு தூரம்' செல்லும்

# கொழும்பில் பாரிய தேடுதல்வேட்டை இரவோடு இரவாகப் பலர் கைது

## லொட்ஜ்கள் முற்றுகை; ஆயிரக்கணக்கில் கைது வெளிநாட்டு முகவர்களும் தேடப்படுகின்றனர்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள தமிழர்களை பொலிஸார் தொடர்ந்தும் கைது செய்து வருகின்றனர். இரவோடு இரவாக இரும்புக் கம்பிகளை கொண்டுபகுதிகளை சுற்றி வளைத்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் 18வயதிற்கும் 35இற்கும்இடைப்பட்ட வயதினை சேர்ந்த சுமார் 1000க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த வருடம் மட்டும் வடக்கு கிழக்கை சேர்ந்த சுமார் 40,000 பேர் கொட்டாஞ்சேனையில் வசித்து வருவதாகவும்இவர்களில் பலர் இப்பகுதியில் உள்ள 40க்கு மேற்பட்ட லொட்ஜ்களில் தங்கியிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தமிழ் இளைஞர்களை தேடி கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கையில் கொழும்பு தெற்கு, கொழும்பு வடக்கு, கொழும்பு மத்திய பொலிஸ் பிரிவுகளில் உள்ள சுமார் 20 பொலிஸ் நிலையங்களின் தலைமையில் பொலிஸார் தமது நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் அதிகாரிகள் கல்கிசை நுகேகொட பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையிலும் செயல்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் அனேகர் அண்மைக்காலங்களில் கொழும்பு வந்தவர்கள் என்றும் இவர்களில் சிலரிடம் அடையாள அட்டை கூட இல்லை என்றும் கைது செய்யப்பட்டவர்களை தேசிய இரகசிய புலனாய்வுத்துறை NIB, இரகசியப்பொலிசாரும் (LIB) விசாரணைசெய்துவருவதாகவும் விசாரணை முடிவின் பின்னரே இவர்கள் விடுதலை செய்யப்படுவரென அறியவருகிறது.

அனேகர் அண்ணன் பரிசில் தம்பி இத்தாலியில் என்றும் வெளிநாடு செல்ல வந்துள்ளோம் என்றும், சகோதரன் விசா அனுப்புவார், திருமணம் செய்ய வந்துள்ளோம் என்றும் பல காரணங்களை கூறுகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் கொடுத்த தகவலை கொண்டு வெளிநாட்டு முகவர்களை இதுவரை தேடி வருவதாகவும் அவர்களில் அனேகர் தமிழராக இருப்பதாகவும் தெரிய வருகின்றது வெளிநாட்டு முகவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக விசாரிக்க வரவில்லை என்றும் சிலர் தலைமறைவாக உள்ளதாகவும் தெரிய வருவதாகவும்அறிவிக்கப்பட்டுள்ளது

அனேகர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அனுமதிப் பத்திரம்இல்லாமல் சட்ட பூர்வமற்ற முறையில் வெளிநாட்டு முகவராக செயல்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது இந்த முகவர்களுக்கு எதிரா வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாக ஆராய்வதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்யும் போது இவர்கள் இருந்த பல இடங்களை இரகசிய புலனாய்வு துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது இதே வேளை இச்சமயத்தில் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்ட 198ற்கு மேற்பட்டவர்களை வைத்திருந்த 15 லொட்ஜ்கள் புலனாய்வுதுறையினரால் மூடப்பட்டுள்ளது.

புறக்கோட்டையில் 275 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களில்அனேகர்கடைகளில் இருந்துகைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்களை குணசிங்கபுர விளையாட்டு மைதானத்தில் 8-ம் திகதி இரவு முதல் அடுத்தநாள் நண்பகல் வரை கை கட்டப்பட்ட நிலையில் வைத்திருக்கப்பட்டனர் என்றும்இதில் பெண்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டிமெல் இன்று வருகிறார்

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த இவர், தன்மீது சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுகளை அடுத்து நாட்டைவிட்டு தப்பி ஓடினார்.

இப்பொழுது இவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து இவர் நாடுதிரும்பவுள்ளார்.

இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கக் கூடும் எனவும் மற்றும் உயர் பதவி கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் படையினருக்கு அன்பளிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் படையினரை உற்சாகப் படுத்தும் நோக்கத்துடன் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் படையினருக்கு அன்பளிப்பு பொருள்களை வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தின் முன்பாக இவ் அன்பளிப்பு பொருள்களை பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா வழங்கினார்.

மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டிகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், நுளம்புத் திரிகள்போன்றவை இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## பொலிஸ் மீது ராணுவம் சூடு; கைதானவரை மீட்டுச்சென்றனர்

அம்பாறை மாவட்டம் பதியலாவ இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டுபொலிசார் காயமுற்றனர்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி சோதனையில் பொலிசார் ஈடுபட்டிருந்ததாகவும், அப்போது அவ்வழியே வந்த இராணுவத்தினர்மூவர் அடையாள அட்டைகளைக் காண்பிக்கமறுத்ததைத்தொடர்ந்து அவர்களைக் கைது செய்த பொலிஸார் மகாஓயா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்ததாகவும், ஒரு ஜீப்பில் பின்தொடர்ந்து வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு இராணுவத்தினரை மீட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்குமிடையே பெரும் மோதல்ஒன்று ஏற்பட இருந்ததாகவும் எனினும், கிழக்கு மாகாண இராணுவ தளபதிலக்கி அல்கம கிழக்கு மாகாண பொலிஸ் டி ஐ ஜி. பி ஜயசூரியா எஸ் பி நூர்தீன், ஏ. எஸ்.பி. ரவி விஜய குணவர்த்தனா ஆகியோருடன் அம்பாறை மாவட்ட ஐ, தே. க எம். பி சந்திரதாச கலப்பதியும் தலையிட்டு தவிர்த்ததாகவும் கூறப்படுகின்றது.

## வவுனியா வர்த்தகர் கொலை இருவர் கைது, லொறி மீட்பு;

(கொழும்பு)

மண்ணெண்ணெய் கொண்டு செல்வதற்கான அனுமதியை படையினரிடமிருந்து பெற்றுத் தருவதாகக் கூறி வவுனியாவைச் சேர்ந்த தமிழ் வர்த்தகரான கனகசுந்தரம் இலங்கேஸ்வரன் என்பவரை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று அவரிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாவை கொள்ளையடித்த பின்னர் கொலை செய்த இருவரை அநுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நவம்பர் 17-ம் திகதியன்று இடம்பெற்ற இக்கொலையை அடுத்து இலங்கேஸ்வரனின் சடலம் உலுக்குளம் அருகே கண்டெடுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இலங்கேஸ்வரனுக்கு சொந்தமான லொறியும் இலக்கத்தகடு மாற்றப்பட்ட நிலையில் கராஜ் ஒன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## நான்கு பேருக்கு எயிட்ஸ் மாத்தறையில் கண்டுபிடிப்பு

மாத்தறை ஆதார வைத்தியசாலையில் நான்கு எயிட்ஸ் நோயாளிகள் இது வரையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

கனவே மரணமடைந்து விட்டதாகவும், மற்ற மூவரும் கொழும்பு பொதுவைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருப்

## மாலைதீவுப் பொலிசாரால் சிங்கள இளைஞர் சித்திரவதை

### - பிரேமதாசாவிடம் முறையிட்டாராம்

(கொழும்பு)

மாலைதீவில் வேலைத்தல நிலைமை விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற சிறி

குள்ள வேலைத்தல நிலைமைகள், மற்றும் வாழ்க்கை பற்றி எடுத்துரைக்கும் படியும் இவர்கள் கேட்கப்பட்டிருந்தனர்.

சாலை ஒன்றில் தினமும் சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந் நிலையில் மாலைதீவிலுள்ள சிறிலங்கா தூதுவரகத்

நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, அப்புறமே சமாதான நடவடிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது ஐரோப்பாவில் நடந்துவரும் செர்பியாவிற்கும் பொஸ்னியாவிற்கும் இடையிலான போரின் போதும் யுத்தநிறுத்தம் பற்றியே முதலில் பேசப்படுகின்றது. யுத்தநிறுத்தம் குறித்து 35 தடவைகளுக்கு மேல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபோதும், அவை தோல்வியில் முடிவடைந்தன. இருப்பினும் போரை நிறுத்துவதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் முதலில் யுத்தநிறுத்தம் பற்றிப் பேசப்படுகின்றதே ஒழிய முதலில் தீர்வு குறித்து பேசப்படவில்லை. ஏனெனில் அது நடைமுறைச் சாத்தியமற்றது ஆகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம்வழமைக்கு மாறாகபேச முற்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழரை மீண்டும் ஒருமுறை ஏமாற்ற சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து 'எவ்வளவு தூரம்' செல்லும் என்பது இறுதியாக நிகழ்ந்த பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் முன் ஐக்கியதேசியக்கட்சி பிரஸ்தாபித்த ஒன்பது மாகாணசபைகள் திட்டத்தில் இருந்தே தெரியவரும். இதன்மூலம் அரசாங்கம்தமிழரின் தேசியஇனப்பிரச்சினையைஓர் தனித்துவமான பிரச்சினை என்று கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை எனத் தெரிகின்றது. மறுவளமாக இராணுவத்திற்கு ஆட்கள் சேர்ப்பதிலும் இராணுவத்தை நவீன மயப்படுத்துவதிலும், தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. மேலும், பொருளாதாரத் தடையை தீவிரமாக்குவதிலும், யாழ்ப்பாண முற்றுகையைமேலும்இறுக்குவதிலும் தீவிர அக்கறையாகச் செயற்பட்டும் வருகின்றது.

இந் நிலையில், 'போருடன் பேசுதல்' என்ற அரசாங்கத்தின்யோசனையானதுதமிழர்களைபேச்சின் பக்கம் திசை திருப்பி இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் திட்டமே ஒழிய வேறில்லை. அதாவது பெரும் தாக்குதலுக்கு அரசாங்கம் தயாராகிவருவது பேச்சுக்களின் போது இராணுவ அழுத்தங்களை ஒரு புறம் பிரயோகிக்க முற்படுதலேயாகும். ஆனால், பேச்சுத் தொடங்கியபின் இராணுவ அழுத்தம் ஏற்படின் அதைச் சுட்டிக்காட்டி பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டால் விடுதலைப் புலிகளே பேச்சுக்களை குழப்பியதாகப் பிரசாரம் செய்யவும், அதன் மூலம் உலக நாடுகளிடம் ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளவும்அரசாங்கத்தால் முடியும்.

ஆகையினால், "போருடன் பேசுதல்" என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம் தமிழரை ஓர் இராஜதந்திர பொறிக்குள் தள்ளும் திட்டமே ஒழிய இனப்பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தும் நல் நோக்கில் முன் வைக்கப்பட்ட ஓர் திட்டமல்ல.

இவ்வாறு இல்லா விட்டால் அதாவது உண்மையிலேயே சிங்கள அரசு இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படுமானால், தமிழ் விவகாரம் ஒரு தனித்துவமான பிரச்சினை என்பதனையும், பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலையையும், தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய ஓர் தீர்வுத் திட்டத்தை முன் வைக்க அரசு தயாராக உள்ளதையும். திறந்த மனத்துடன் வெளிக்காட்ட வேண்டும். இதைவிடுத்து அரசியற் சூழ்ச்சிகளால் தமிழர்களை ஏமாற்றி வெற்றி பெற்று விடலாம் என எண்ணுவது பிரச்சினைக்கு தீர்வாகாது. அதற்கு தமிழர்கள் பலியாகவும் மாட்டார்கள்.

## இருவர் கைது, [illegible]

(கொழும்பு)

மண்ணெண்ணெய் கொண்டுசெல்வதற்கான அனுமதியை படையினரிடமிருந்து பெற்றுத் தருவதாகக் கூறி வவுனியாவைச் சேர்ந்த தமிழ் வர்த்தகரான சுந்தரம் இலங்கேஸ்வரன் என்பவரை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று அவரிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாவை கொள்ளையடித்த பின்னர் கொலை செய்த இருவரை அநுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நவம்பர் 17-ம் திகதியன்று இடம்பெற்ற இக்கொலையை அடுத்து இலங்கேஸ்வரனின் சடலம் உலுக்குளம் அருகே கண்டெடுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இலங்கேஸ்வரனுக்கு சொந்தமான லொறியும் இலக்கத்தகடு மாற்றப்பட்ட நிலையில் கராஜ் ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நான்கு பேருக்கு எயிட்ஸ் மாத்தறையில் கண்டுபிடிப்பு

மாத்தறை ஆதார வைத்தியசாலையில் நான்கு எயிட்ஸ் நோயாளிகள் இது வரையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

எனினும் இவர்களில் ஒருவராவது மாத்தறை ஆதார வைத்தியசாலையின் ஆய்வு கூடத்தின் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், ஆதார வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் எயிட்ஸ் பரிசோதனைக்குரிய வசதிகள் எதுவும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

இவ் வைத்தியசாலையில்எயிட்ஸ் காரணமாக ஒருவர் ஏற்கனவே மரணமடைந்து விட்டதாகவும், மற்ற மூவரும் கொழும்பு பொதுவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### பொலிஸ் பலி

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் தற்செயலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின் போது ஒரு பொலிசார் கொல்லப்பட்டுள்ளார் கே எம் திலகரத்ன என்ற பொலிஸ்கான்ஸ்டபிளே கொல்லப்பட்டுள்ளார்.

## பரீட்சை புள்ளி மோசடி; ஆசிரியர் நியமனம் ரத்து

(கொழும்பு)

தென்னிலங்கையில் கல்விச் சேவைகள் சபையினால் அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட பதினான்கு ஆங்கில ஆசிரியர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்படவுள்ளன. ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கென பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் இவர்கள் ஈட்டிய புள்ளிகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்களே புள்ளிகளை மாற்றியமைத்ததாகத் தெரியவந்துள்ளது.

சம்பந்த பட்ட ஆசிரியர்களைப் பதவியிலிருந்து நீக்குமாறு பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கல்விச் சேவைகள் சபையைக் கேட்டுள்ளார்.

கணித, விஞ்ஞான ஆசிரியர் நியமனத்துக்கான பரீட்சையிலும் பல ஒழுங்கீனங்கள் நடந்திருப்பது குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன அனுராதபுரம், பொலநறுவ ஆகிய இடங்களிலும் இந்த ஒழுங்கீனங்கள் தொடர்பான விசாரணையைக் குற்றப் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

## பாஸ்கரலிங்கம் மீது சர்வோதயா வழக்கு

(கொழும்பு)

சர்வோதயா அமைப்பினால் மேற்கொள்ளப்படும் சட்ட உதவித்திட்டத்திற்கான நிதி உதவியை ஆசியா பவுண்டேஷன் அமைப்பிடமிருந்து பெறுவதை சிறிலங்கா அரசின் கொள்கைத் திட்டமிடல்அமைச்சு தடுத்து விட்டதாக சர்வோதாய அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச அமைப்பு அடிப்படை மனித உரிமைகள் மீறியதாகக் கூறி கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், மற்றும் டைரக்டர் ஜெனரல் சி. மாலியட்ட ஆகியோர் மீது வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

முற்றனர்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி சோதனையில் பொலிசார் ஈடுபட்டிருந்ததாகவும், அப்போது அவ்வழியே வந்த இராணுவத்தினர்மூவர் அடை ஜீப்பில் பின்தொடர்ந்து வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு இராணுவத்தினரை மீட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பொலிசாருக்கு டி ஐ ஜி. பி ஜயசூரியா எஸ் பி நூர்தீன், ஏ. எஸ்.பி. ரவி விஜய குணவர்த்தனா ஆகியோருடன் அம்பாறை மாவட்ட ஐ, தே. க எம். பி சந்திரதாச கலப்பிதியும் தலையிட்டு தவிர்த்ததாகவும் கூறப்படுகின்றது.

## மாலைதீவுப் பொலிசாரால் சிங்கள இளைஞர் சித்திரவதை

### - பிரேமதாசாவிடம் முறையிட்டாராம்

(கொழும்பு)

மாலைதீவில் வேலைத்தலநிலைமைகள் விருத்தி செய்யப்பட வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்த 27 வயதான சிறிலங்காஇளைஞரான ஜே பி. சுனில் மாலைதீவுப் பொலிசாரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது அக்டோபர் மாதத்தில் சிறிலங்கா ஜனாதிபதி மாலைதீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது அங்கிருந்த சிறிலங்காத் தூதுவரகத்தின் ஏற்பாட்டின் கீழ் சிறிலங்கா இளைஞர்களைச் சந்தித்தார் இச் சந்திப்பின் போது அங்குள்ள வேலைத்தல நிலைமைகள், மற்றும் வாழ்க்கை பற்றி எடுத்துரைக்கும் படியும் இவர்கள் கேட்கப்பட்டிருந்தனர் இவ் வகையில் சுமார் நூறு பேர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை மாலைதீவு தலைநகர் மாலேயில் சந்தித்துள்ளனர்.

அப்போது அங்கு மனிதாபிமானமற்ற வகையில் தாம் நடத்தப்படுவதாக இவர்கள் புகார் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாசா மாலைதீவை விட்டுப் புறப்பட்டதும் பொலிசார் ஜே. பி. சுனிலைக் கைது செய்துள்ளனர். இரண்டு மாதங்களாக மாலைதீவிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் தினமும் சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந் நிலையில் மாலைதீவிலுள்ள சிறிலங்கா தூதுவரகத்திடம் தொடர்பு கொண்ட போதும் எந்தப் பயனும் விளையவில்லை. ஈற்றில் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டதன் பின்னர் டிசம்பர் ஏழாம் திகதியன்று நாடு கடத்தப்பட்டு தற்போது அவர் கொழும்பை வந்தடைந்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தம்முடன் மேலும் ஐந்து சிறிலங்காப் பிரஜைகள் தடுத்து வைக்கப் பட்டிருந்ததாகவும், அவர்களில்ஒருவர் பாடசாலை ஆசிரியரெனவும் குறிப்பிட்டார்.

## மாநிலங்களில் ரிசேவ் படை இந்திய மத்திய அரசு ஆலோசனை

(டில்லி)

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் ரிசேவ் பொலிஸ் படைப் பிரிவுகளை ஏற்படுத்துவது குறித்து பரிசிலிக்கும்படி மாநில அரசுகளை இந்திய மத்திய அரசு கேட்டிருக்கிறது.

மத்திய உள்த்துறை அமைச்சர் எஸ். பி. சவான் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் இவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறார். இப்படைப் பிரிவை அமைப்பதற்கு வேண்டிய நிதியின் 50 சத வீதத்தை மத்திய அரசு வழங்கும் என்றும் அமைச்சர்மேலும் தெரிவித்திருக்கிறார்.

### மேகாலயாவில் நில நடுக்கம்

(டில்லி)

பங்களாதேஷ் - மேகாலயா எல்லைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறு நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் சுமார் 15 வினாடிகள் மேற்படி பகுதியில் காணப்பட்ட குடியிருப்புக்களின் யன்னல்களும் கதவுகளும் குலுங்கின. இதனால் இப்பகுதி மக்கள் பீதியடைந்தனர். எனினும் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

அங்கோலாவில்

## அரசாங்கத்துடன் இணைய யூனிட்டா படைகள் தயார்

(லுவாண்டா)

அங்கோலாவில் அரசப் படைகளுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தி வந்த யூனிட்டா இயக்கம் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

அத்துடன் தேசிய ஒருமைப்பாட்டு அரசின் இராணுவத்துடன் தமது படையணிகளையும் இணைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை யூனிட்டா இயக்கத்தின் அறிவிப்பு ஒரு தந்திரமாக இருக்கலாம்என்று வர்ணித்துள்ள அங்கோலாப் பிரதமர் மார்க்கொலினோ மாகோ இருப்பினும் இது ஒரு ஆக்கபூர்வமான திருப்பம் என்று வரவேற்பும் தெரிவித்தார். யூனிட்டாவின் சொற்கள் செயலாக்கப்படும் போது தான் ஆக்கபூர்வ பயன் விளையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

# இந்தியா மீது எண்ணெய் தடை ஒபெக் நாடுகள் விதிப்பு

## மசூதி இடிக்கப்பட்டதன் எதிரொலி

(லண்டன்)

அயோத்தியாவில் பாபர் மசூதி உடைக்கப்பட்டதை அடுத்து இந்தியாவிற்கு பெற்றோலிய உற்பத்திநாடுகள் சில அவற்றை ஏற்றுமதி செய்யப்போவதில்லை என அறிவித்துள்ளன.

இந்த செய்தியை இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பாவர் உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பெற்றோலிய உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான 'ஒபெக்' நாடுகளின் தலைவர்களுடன் பேசியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா மீது எண்ணெய்த் தடையைக் கொண்டுவருவது சாத்தியமற்ற ஒன்றாக எண்ணெய் சந்தையாளர் கருதுவதாக பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

உலக எண்ணெய் சந்தையை நோக்கும்போது இப்படியான முடிவு 'ஒபெக்' நாடுகளைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியில் சிறப்பான ஒன்றல்ல என அவர்கள் கருதுகின்றனர் என பி.ரி.ஐ மேலும் தெரிவிக்கிறது.

## காருக்கு குண்டு

துருக்கி நாட்டில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியின் கார் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

அயோத்தி பாபர் மசூதி அழிப்புத் தொடர்பாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இதனைச் செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

# அயோத்தியா வன்செயல் கேரளத்தில் 35 பேர் கைது

கேரளத்தில் அயோத்தி வன்செயல்கள் சம்பந்தமாக முப்பத்தைந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் அலுவலகங்கள் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன இவற்றில் ராஷ்ய சேவா சங்கத்தின் 35 அலுவலகங்களும், இஸ்லாமிய சேவா சங்கின் எட்டு அலுவலகங்களும், ஜமாத்தே இஸ்லாமியின் 10 அலுவலகங்களும் அடங்கும்.

# அயோத்தியா சம்பவம் சி.பி.ஐ. விசாரிக்கும்

அயோத்தியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு மத்திய புலனாய்வுப் பிரிவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்று இதனை அறிவித்த அதிகாரி ஒருவர், உத்தரப் பிரதேச அரசின் அனுமதியுடன் இந்த விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

# மேற்கு வங்காளத்திலும் பாரதீய ஜனதா தலைவர் கைது

மேற்கு வங்காளத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவரும், ஏனைய ஏழு தலைவர்களும், அந்தக்கட்சியின் தேசிய துணைத் தலைவரும் கைது செய்யப்பட்டார்கள். இவர்களின் கைது நேற்றுக் கல்கத்தாவில் இடம் பெற்றது.

இன ஒற்றுமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை 4-ம் வருட மாணவன்

## செல்வன் சீ. யோகநாதன்


# பிரிட்டிஷ் தூதுவர் மட்டு.விஜயம்

(மட்டக்களப்பு)

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் திரு. ஜோன்பீல்ட் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

அங்கேயே தங்கியிருந்த அவர் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். இடம் பெயர்ந்த அகதிகள் குறித்தும் அவர்களின் மீளக்குடி அமர்வு குறித்தும் ஆராயப்படவுள்ளது.

## மலையகத்திலும் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

மலையகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் தமது பகுதிகளை விட்டு வெளிப்புறங்களுக்குச் சென்றால் அவர்களை பொலிசார் கைது செய்து தடுத்து வைக்கின்றனர்.

இவர்கள் நீண்ட நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

## தற்கொலை

புலோலி தெற்கு வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் மூச்சஸ் குளம் கோவிலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லையா- சச்சிதானந்தம் [வயது 41] என்பவரே குடும்பத் தகராறு காரணமாக கடந்த 11 ஆம் திகதி அதிகாலை தற்கொலை செய்து கொண்டவராவார். (யோ)

## கன்ரபரி

படும் மேற்கு நாட்டு நிறுவனங்கள் மதமாற்றத்தில் ஈடுபடுவதாகவும், இத்தகைய சமூக சேவை நிறுவனங்களின்செயற்பாடுகளால் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதங்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் அவப்பெயர் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு

அத்துடன் கமிஷன் அமைப்பதற்கான விதிகளுக்கு அமைய விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இதில் விசாரணை சுதந்திரமான முறையில் நடைபெறுவதே பிரயோசனமாக அமையும் எனவும் இது தொடர்பாக எதிர்க்கட்சிகளும் கமிஷன் முன் சில விடயங்களை அறிவிக்க இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

மேற்படி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் உண்மையிலேயே அக்கறையாக இருக்குமாயின் இவ் ஆணைக்...

# பொது மருத்துவமனையில் எயிட்ஸ் நோய் சிகிச்சை

எயிட்ஸ் நோயாளிகள் இப்போது அரச பொது மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். கொழும்பு பொது மருத்துவமனையில் மூன்று எயிட்ஸ் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயாளிகளுக்கு சாதாரண மருத்துவ மனைகளில் சிகிச்சை வழங்கலாம் என்பதை உலகசுகாதார ஸ்தாபனம் அனுமதித்துள்ளது என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜோர்ஜ்பெர்னான்டோ.

எயிட்ஸ் ஒழுங்கீனமான பாலியல் உறவுகளால் ஏற்படுகிறதாகக் கூறும் டாக்டர் ஜோர்ஜ் பெர்னான்டோ, சிறிலங்காவில் காணப்படும் 76 எயிட்ஸ் நோயாளிகளும் பாலியல் உறவுகளினாலேயே இந்த நோய் வாய்ப்பட்டனர் என்கிறார்.

இரத்தம் ஏற்றுவதன் மூலம் எயிட்ஸ் நோய் பரவும் சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு என்கிறார் அவர். மருத்துவ மனையில் இரத்தம் எடுக்கும் போது இரத்தம் பரிசோதிக்கப்படுவதுடன் ஊசிகள் தொற்று நீக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# மக்கள் பார்வைக்கு மூங்கில் படகு

[வடமராட்சி]

சற்கோட்டைப் பகுதியில் கரை ஒதுங்கிய 'மூங்கில் படகு வீடு' புனித சவேரியார் அறிவகத்திற்கு முன் மக்களது பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை முதல் மாலை வரை இதனைப் பார்வையிடுவதற்கு அதிகமானோர் சென்று வருகின்றனர். (யோ)

## முன்னாள் இன்ஸ்பெக்டரின்

# மனைவியின் பற்களை உடைத்த கொள்ளையர்

(வெள்ளவத்தை)

முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் வீட்டில் நுழைந்த கொள்ளைக் கோஷ்டியினால் அவர் மனைவி தாக்கப்பட்டார் கொள்ளையர் அவரின் வாயை நசித்ததில் 11 பற்கள் கழன்றுவிட்டன

வெள்ளவத்தையில் உள்ள முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் மனைவி வீட்டில் இருக்கும் போது திடீரென உள்ளே சென்ற கொள்ளையர்கள் அவரிடம் பணம் கேட்டனர் அவர் மறுக்கவே பணம் இல்லை என்றா இந்த வாயால் பொய் சொன்னாய் என்று கூறி கொள்ளையர் வாயை நசித்தனர். உடனே 11 பற்கள் கழன்று வீழ்ந்தது பின்னர் அவரின் கழுத்திலிருந்த மாலையைப் பறித்துக் கொண்டு கொள்ளையர் தப்பி ஓடிவிட்டனர்.

# பாபர் மசூதி அழிவுக்கு பின் சார்க்வலுப்பெறுவதுகடினம்

ராய்டர் கருத்து

இந்தியாவின் அயோத்தி பாபர் மசூதி அழிவுக்குப் பிறகு சார்க் அமைப்பு வலுப்பெறுவது கடினம் என்று ராய்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

எனினும் 'சார்க்' அமைப்பை வலுவுள்ளதாக்க தாம் உறுதிகொண்டிருப்பதாக டாக்கா வந்திருந்த ஜனாதிபதி பிரேமதாசா பாகிஸ்தான் பிரதமர் நவாப் சரீப், பங்களதேஷ் பிரதமர் பேகம் காலியா சியா கூட்டாக அறிக்கை விட்டுள்ளனர்.

# குளத்தில் மூழ்கி மாணவன் மரணம்

கைதடியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சித்த ஆயுர்வேதக்கல்லூரி மாணவனொருவர் குளம் ஒன்றில் குளித்துக் கொண்டு இருக்கும் பொழுது மூழ்கி மரணமானார் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப்பகல் நுணாவில் கண்டி வீதியில் அமைந்துள்ள பிள்ளையார்கோவிலை அண்டிய பகுதியில் அமைந்துள்ள குளம் ஒன்றிலேயே இவர் மூழ்கி மரணமாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவத்தில் எஸ் யோகநாதன் (25 வயது) (87 நாவாந்துறை மட்டக்களப்பு) என்கிற மாணவரே மரணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரது சடலம் நேற்று பகல் ஒருமணியளவில் யாழ் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இச்சடலத்தின் வாய், மூக்கு என்பனவற்றில் இரத்தம் கசிந்த வண்ணமிருந்ததை காணக்கூடியதாக இருந்தது (பா)

# மாத்தறை ரயிலில் வெடிகுண்டுப் புரளி

(கொழும்பு)

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த றுகுணுகுமாரி புகையிரதத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து, இரத்மலானை நிலையத்தில் வண்டி நிறுத்தப்பட்டது.

இரத்மலானை புகையிரத நிலையத்திற்கு சமீபமாக வந்துகொண்டிருந்தபோது அநாதரவாகக் கிடந்த பொதியொன்றைக் கண்ட பயணிகள் குண்டு இருப்பதாக எண்ணிக் கலவரமடைந்தனர். வண்டி உடனடியாக நிறுத்தப்பட்டதுடன் பயணிகளும் அவசரம் அவசரமாக இறக்கப்பட்டனர். எனினும் பார்சலை வைத்திருந்தவர் தன்னுடைய பார்சல் என்பதை இனங்காட்டிப் பெற்றுக்கொண்டதும் இரண்டு மணிநேர தாமதத்தின் பின் புகைவண்டி கொழும்பை நோக்கிப் புறப்பட்டது இச்சம்பவம் கடந்த வியாழனன்று காலையில் இடம் பெற்றது.

# பேச்சுவார்த்தை முன்னேற


## மரண அறிவித்தல்

### திரு. மார்க்கண்டு தர்மலிங்கம்

(முன்னாள் வர்த்தகர், சந்தைச்சதுக்கம், சங்கானை)

சங்கானை தெற்கு, அராலி வீதியைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு தர்மலிங்கம் அவர்கள் (முன்னாள் வர்த்தகர், சந்தைச் சதுக்கம், சங்கானை) 13-12-1992 -ல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் பார்வதிப்பிள்ளையின் அன்புக்கணவரும் திருமதி மு.கனகம்மா, திருமதி த.தெய்வானைப்பிள்ளை, திருமதி கு. இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சி. முத்தையா, திரு. சி. தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற சி. குமாரசாமி, சுன்னாலை தெற்கு க. வேலுப்பிள்ளை, திருமதி க. சிவ...

விசாரணை நடத்துமாறு மத்திய புலனாய்வுப் பிரிவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதியுடன் இந்த விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

## மேற்கு வங்காளத்திலும்
### பாரதீய ஜனதா தலைவர் கைது

மேற்கு வங்காளத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவரும், ஏனைய ஏழு தலைவர்களும், அந்தக்கட்சியின் தேசிய துணைத் தலைவரும் கைது செய்யப்பட்டார்கள். இவர்களின் கைது நேற்றுக் கல்கத்தாவில் இடம் பெற்றது.

இன ஒற்றுமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை
4-ம் வருட மாணவன்

**செல்வன் சீ. யோகநாதன்**

அவர்கள்

13-12 92 அன்று அகால மரணமானார்
அவருக்கு எமது இதயபூர்வமான
கண்ணீர் அஞ்சலியை
செலுத்துகிறோம்.

சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்
கைதடி.

(3781)



## வெற்றிடங்கள்

யாழ். நகரில் உள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. தட்டெழுத்தாளர் ஆங்கிலம் / தமிழ் (பெண்கள் மட்டும்)
2. போட்டோ பிரதி இயந்திர இயக்குனர்
3. காவலாளி (இரவு), (பகல்)
4. கணக்காளர்
5. லிகிதர்
6. மொழி பெயர்ப்பாளர்
7. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள்
8. களஞ்சிய காப்பாளர்
9. சிற்றூழியர்

மேற்கூறிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் நாளை செவ்வாய் 15-12-92 முற்பகல் 9 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் பின்வரும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**வில்லியம் ஹாவே**
**ஞாபகார்த்த மருத்துவமனை**
**17, கண்டி றோட், சுண்டுக்குழி,**
**யாழ்ப்பாணம்.**

[சி-5584]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


பாடுகளால் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதங்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் அவப்பெயர் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு

அத்துடன் கமிஷன் அமைப்பதற்கான விதிகளுக்கு அமைய விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இதில் விசாரணை சுதந்திரமான முறையில் நடைபெறுவதே பிரயோசனமாக அமையும் எனவும் இது தொடர்பாக எதிர்க்கட்சிகளும் கமிஷன் முன் சில விடயங்களை அறிவிக்க இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

மேற்படி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் உண்மையிலேயே அக்கறையாக இருக்குமாயின் இவ் ஆணைக்குழுவுக்கு தகுதியான ஆணையாளர்களை இனங்காட்டுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் இதற்கான ஆற்றல் தமக்கு இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

மேலும் அராலித்துறையில் புலிகளால் முன்னர் எப்போதோ புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியின் மேல கவாகனம் சென்றதாலேயே அது வெடித்ததாக ஆரம்பத்தில் அரசு கூறியது. ஆனால் தற்பொழுது கண்ணிவெடியை வெற்றிகரமாக வெடிக்க வைத்தமைக்காக புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பரிசில் வழங்கும்புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கிறது. இதன் மூலம் அரசு ஆரம்பத்தில் கூறிய கூற்றையே மறுதலிப்பதாக இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

### தபால்

களை இறக்கிக்கொண்டிருக்கும் 'குமாரி' கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனவே சோதனை என்ற பெயரில் யாழ். குடாநாட்டிற்கான தபால் சேவையை சீர்குலைக்க கூட்டுப்படை தலைமை அலுவலகம் முயற்சி செய்வதாக தெரிவிக்கப்படுகிறது. (பா

### விமானப்படை

ருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை விமானப் படைத் தலைமையகம் தனது பிராந்திய அலுவலகங்களில் சேர்க்கி வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு விதமான வெடிமருந்துப் பொருள்களையும் அழித்து விடுவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளது.

## வெடிகுண்டுப் புரளி

(கொழும்பு)

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த றுகுணுகுமாரி புகையிரதத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து, இரத்மலானை நிலையத்தில் வண்டி நிறுத்தப்பட்டது.

இரத்மலானை புகையிரத நிலையத்திற்கு சமீபமாக வந்துகொண்டிருந்தபோது அநாதரவாகக் கிடந்த பொதியொன்றைக் கண்ட பயணிகள் குண்டு இருப்பதாக எண்ணிக் கலவரமடைந்தனர். வண்டி உடனடியாக நிறுத்தப்பட்டதுடன் பயணிகளும் அவசரம் அவசரமாக இறக்கப்பட்டனர். எனினும் பார்சலை வைத்திருந்தவர் தன்னுடைய பார்சல் என்பதை இனங்காட்டிப் பெற்றுக்கொண்டதும் இரண்டு மணிநேர தாமதத்தின் பின் புகைவண்டி கொழும்பை நோக்கிப் புறப்பட்டது இச்சம்பவம் கடந்த வியாழனன்று காலையில் இடம்பெற்றது.

## பேச்சுவார்த்தை முன்னேற அமெரிக்கா முயற்சிக்கவில்லை
### -பி. எல். ஓ. குற்றச்சாட்டு

[வாஷிங்டன்]

மத்திய கிழக்கு சமாதான பேச்சுக்கள் முன்னேறுவதற்கு அமெரிக்கா எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது

பாலஸ்தீனியப் பகுதிகளில் இடம்பெறற இன்டிபாடா மக்கள் எழுச்சியின் 5ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக ஒருநாள் பேச்சுக்களை புறக்கணித்த அரபுத் தூதுக்குழுக்கள் கடந்த ஒன்பதாம் திகதியன்று மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தன.

இதேவேளை அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறுகையில் இந்தப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய எந்தச் சந்தர்ப்பத்தையும் இழக்கத் தயாராக இல்லை என்றார்.

மேலும் சிரியா மற்றும் லெபனான் தூதுக்குழுக்களின் நடத்தை தொடர்பாக இஸ்ரேல் கோபமுற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் பேச்சுவார்த்தையை தொடரும்படி மட்டுமே கடந்த ஆகஸ்ட் முதல் அமெரிக்கா கூறிவருகிறது. ஆனால் உருப்படியான எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்று பாலஸ்தீனிய தூதுக்குழுவின் பிரதம ஆலோசகரும், யாசீர் அரபாத்தின் முக்கிய ஆலோசகருமான நபில் சபாத் வாஷிங்டனில் செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது கூறியுள்ளார்.

## இந்தோனேசிய நிலநடுக்கம் 1300 பேர் பலி

(டில்லி)

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூமி நடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1300 ஆக உயர்ந்துள்ளது

கிழக்கு கரையோர நகரமான மூமேரில் அழிவு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல கட்டடங்கள் அழிந்தன. மீட்பு உதவிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## எல்லைப்புறம் என உபயோகிக்க கூடாது
### - ஹுருள்ளே

(கொழும்பு)

ஹொரவப்பொத்தான போன்ற கிராமங்களைக் குறிப்பிடுவதற்கு எல்லைப் புறக் கிராமங்கள் என்ற சொற் பிரயோகம் பாவனைக்கு வசதியானது என்றாலும் அத்தகைய சொற் பிரயோகத்தை நாம் தொடர்ந்து மேற்கொள்ளக்கூடாது என்று அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தேமியா ஹுருள்ளே பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

### கருத்தறிய முயற்சி

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக அங்கத்துவ நாடுகளின் கருத்தறியும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஈடுபட்டுள்ளது.

அண்டிய பகுதியில் அமைந்துள்ள குளம் ஒன்றிலேயே இவர் மூழ்கி மரணமாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின் ... தின் வாய், மூக்கு என்பனவற்றில் இரத்தம் கசிந்த வண்ணமிருந்ததை காணக் கூடியதாக இருந்தது (பா)


## மரண அறிவித்தல்

**திரு. மார்க்கண்டு தர்மலிங்கம்**

(முன்னாள் வர்த்தகர், சந்தைச்சதுக்கம், சங்கானை)

சங்கானை தெற்கு, அராலி வீதியைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு தர்மலிங்கம் அவர்கள் (முன்னாள் வர்த்தகர், சந்தைச் சதுக்கம், சங்கானை) 13-12-1992 -ல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் பார்வதிப்பிள்ளையின் அன்புக்கணவரும் திருமதி மு.கனகம்மா, திருமதி த.தெய்வானைப்பிள்ளை, திருமதி கு. இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சி. முத்தையா, திரு. சி. தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற சி. குமாரசாமி, துன்னாலை தெற்கு க. வேலுப்பிள்ளை, திருமதி க. சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. த. சிவசுப்பிரமணியம் (லீலா பேக் கவுஸ் சங்கானை), திரு. த கோவிந்தசாமி (லீலா) லீலா ஸ்ரோர்ஸ், சங்கானை), திரு. த பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புத்தாய்மாமனும் திரு. க கதிர்காமத்தம்பி (முகாமையாளர், லீலாபேக் கவுஸ், சண்டிலிப்பாய் கிளை) அவர்களின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 14-12-92 (இன்று) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு (கரைச்சி) மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

திரு. த. சிவசுப்பிரமணியம்,
திரு. த. கோவிந்தசாமி
(லீலா)

மருமக்கள்

(சி-3780)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7092

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

40-6979, 26-1495, 41-9855, 28-159, 27-0991,
44-9997, 42-7975, 27-4673, 26-6924, 26-3390,
24-1127, 26-8917, 26-7525, 41-8432, 26-3321,
24-5199, 42-2323, 24-3436, 24-4747, 26-4450,
27-9707, 26-1791.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9105, 22-6922, 42-1059, 27-7419, 28-9633,
24-7961, 28-7662, 27-4406, 41-1996, 27-5077,
42-2855, 26-6933, 22-2250, 26-3530, 41-9696,
26-6492, 26-8674, 22-9005, 41-4129, 27-5482,
26-0512, 28-3289, 42-3726.